**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.**
**முன்னிலை : திரு.C.ஜெயப்பிரகாஷ், M.Com., M.L.,**
**சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்**
**2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
**2056 திருவள்ளுவர் ஆண்டு விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 13ம் நாள்**
**அசல் வழக்கு எண்.149/2025**
[CNR.No.TNDG190004052025]

M.கவியரசன் .... வாதி

// எதிராக //

N.பழனியம்மாள் .... பிரதிவாதி

இவ்வழக்கு கடந்த 08.08.2025 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 12.08.2025ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 23.03.2026ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.A.பூர்ணச்சந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், பிரதிவாதி அழைத்தும் முன்னிலையாகாத காரணத்தினால் கடந்த 04.11.2025ஆம் தேதி ஒருதலைபட்சநிலைக்கு உட்படுத்தப்பட்டும், வாதி தரப்பு வழக்குரைஞரின் வாதுரை கேட்கப்பட்டும், வழக்குரை, சான்றாவணங்கள், வழக்கு கோப்பு ஆகியவைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டும், இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீ ர் ப் பு ரை**

**1.** அசல் வழக்கானது தாவா தொகை, பின்வட்டி மற்றும் செலவுதொகை வேண்டி வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வாதி தாக்கல் செய்த வழக்குரை சுருக்கம் :**

வாதியிடமிருந்து, பிரதிவாதி அவருடைய அவசர நிமித்தம், குடும்ப செலவுக்காகவும், விவசாய செலவிற்காகவும், சில்லரை கடன் தீர்க்கும் பொருட்டும், கடனாக ரொக்கம் ரூ.2,00,000/– பெற்றுக்கொண்டு மாதம் ஒன்றுக்கு ரூ.100/–க்கு ரூ.1.00 வீதம் வட்டி சேர்த்து வாதி வேண்டும்போது செலுத்துவதாக ஒப்புக்கொண்டு

கடந்த 07.01.2024ம் தேதி வாதியின் பெயருக்கு, சாட்சிகள் முன்னிலையில் தாவா கடனுறுதிசீட்டில் பிரதிவாதி கைரேகை செய்து கொடுத்துள்ளார். வாதி, பிரதிவாதியிடம் பலமுறை நேரிலும், ஆட்கள் வழியாகவும் கடனுறுதிச்சீட்டிற்கான அசல், வட்டித்தொகையை திரும்ப செலுத்தும்படி கேட்டும், பிரதிவாதி தொகை செலுத்துவதாக காலம் கடத்தி வந்ததால், தாவா கடனுறுதிசீட்டு கடன் தொகையை வசூலிக்க வேண்டி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** வாதி தரப்பில், வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரித்து, வா.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்தும், தாவா கடனுறுதிசீட்டை எழுதியதும், சாட்சியுமாக கையெழுத்து செய்துள்ள நபரான வா.சா.2 அருண்குமார் என்பவர் வா.சா.2 ஆக விசாரித்தும், வழக்கு விசாரணை முடிக்கப்பட்டுள்ளது.

**4.** இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், வாதி வழக்குரையில் கோரியுள்ள தொகையும், பின்வட்டியும், செலவுதொகையும் வாதிக்கு, பிரதிவாதி செலுத்த வேண்டுமா? என்பதே தீர்மானிக்க வேண்டிய பிரச்சனையாகும்.

**5. பிரச்சனைக்கான தீர்வுகள் :**

**5.1.** வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்து பார்க்கும்போது, கடந்த 07.01.2024ஆம் தேதி வாதியிடம், பிரதிவாதி தொகை ரூ.2,00,000/- ரொக்கம் கடனாக பெற்றுள்ளதும், வேண்டும்போது வாதியிடம் செலுத்துவதாக சரத்துக்கண்டு வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டு எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது.

**5.2.** கடனுறுதிச்சீட்டில் சாட்சியாக கையெழுத்து செய்துள்ள வா.சா.2 இந்நீதிமன்ற சாட்சியத்தில், வாதியிடமிருந்து, பிரதிவாதி தொகை ரூ.2,00,000/- பெற்றுக் கொண்டு தாவா கடனுறுதிசீட்டில் வாதியின் வீட்டில் வைத்து பிரதிவாதி கைரேகை செய்து கடன் தொகையை பெற்றுக்கொண்டதாகவும், தான் கடனுறுதிசீட்டை எழுதி முடித்த பின்பு எழுதியதும் சாட்சியுமாக தான் கையெழுத்து செய்ததாகவும் பன்னீர்செல்வம் தாவா கடனுறுதிசீட்டில் சாட்சி கையெழுத்து செய்தார் என்றும், சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி வா.சா.2 என்பவர் இந்நீதிமன்றத்தில் அளித்துள்ள சாட்சியம் ஏற்புடைய சாட்சியமாக உள்ளது.

**5.3.** வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள வா.சா.ஆ.1 சான்றாவணத்தின் வழியாகவும், வா.சா.1 மற்றும் வா.சா.2 ஆகியோர்களின் சாட்சியத்தின் வழியாகவும் வாதி, பிரதிவாதிக்கு கடந்த 07.01.2024 ஆம் தேதி தொகை ரூ.2,00,000/–கொடுத்துள்ளது நிரூபிக்கப்பட்டுள்ளது. வா.சா.1 சாட்சியத்தின் வழியாக இவ்வழக்கிற்கான வழக்குமூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே, கடனுறுதிச்சீட்டில் கண்டுள்ளவாறு வாதிக்கு, பிரதிவாதி தொகை செலுத்தக்கடமைப்பட்டுள்ளார். கடனுறுதிச்சீட்டில் அசல் ரூ.2,00,000/– தொகைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/–க்கு 1.00/– வீதம் வட்டி செலுத்துவதாகவும், வேண்டும்போது தொகை செலுத்துவதாகவும் பிரதிவாதி ஒப்புக்கொண்டிருப்பதால் வட்டியை பொறுத்து வாதி கணக்கிட்டுள்ளதை ஏற்றுக்கொள்வதே சரியானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. எனவே, வழக்குரை தொகை ரூ.2,38,067/– தொகையினையும், அசல்தொகை ரூ.2,00,000/–தொகைக்கு வழக்கு தாக்கல் செய்த நாள்முதல் தீர்ப்பாணை நாள்வரை உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் பிரிவு 34–ன் கீழாக ஆண்டொன்றுக்கு 9% வட்டியும், தீர்ப்பாணை நாள்முதல் தொகை வசூலாகும் நாள்வரை ஆண்டொன்றுக்கு 6% வட்டியும், வழக்கின் செலவுதொகையும் வாதிக்கு, பிரதிவாதி செலுத்த வேண்டும் என்று தீர்மானிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**6. முடிவில்,**

**வழக்குரை தொகை ரூ.2,38,067/– தொகையினையும், அசல் தொகை ரூ.2,00,000/– தொகைக்கு வழக்கு தாக்கல் செய்த 08.08.2025ஆம் நாள் முதல் தீர்ப்பாணை நாளான 27.03.2026ஆம் நாள்வரை ஆண்டொன்றுக்கு 9% வட்டியும், தீர்ப்பாணை நாள் முதல் தொகை வசூலாகும் நாள்வரை ஆண்டொன்றுக்கு 6% வட்டியும், வழக்கின் செலவு தொகையும் வாதிக்கு, பிரதிவாதி செலுத்த வேண்டும் என்று வாதியின் வழக்கு செலவுதொகையுடன் அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27ஆம் நாள் அவையறிய திறந்த நீதிமன்றத்தில் தீர்ப்புரை பகரப்பட்டது.

C JAYAPPRAKASH Digitally signed by C JAYAPPRAKASH Date: 2026.03.27 19:01:43 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்**

**வாதி தரப்பு சாட்சிகள் :**

| | | | | |
|---|---|---|---|---|
| வா.சா.1 | – | கவியரசன் | – | வாதி |
| வா.சா.2 | – | அருண்குமார் | – | சாட்சி |

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:**

| | | | |
|---|---|---|---|
| 1 | 07.01.2024 | வாதிக்கு, பிரதிவாதி எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் கடனுறுதிசீட்டு – அசல் | வா.சா.ஆ.1 |

**பிரதிவாதி தரப்பு சாட்சி** : இல்லை
**பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை

C JAYAPPRAKASH Digitally signed by C JAYAPPRAKASH Date: 2026.03.27 19:01:48 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்**